## ...குளி
## ...ராமரணம்.

...ரி ஜமீன்தார் (பாளைய
...5. திவான்பகதூர் முத்
...ாளிங்கராயர் அவர்கள்
...ேதி வெள்ளிக்கிழமை
...ரிச்கு ஊத்துக்குளியில்
...மனையில் முடிவெய்
...கேட்டு மிகவும் வருந்து

...ர் அவர்கள் கோயமுத்
...ில் புராதனமும், பிரப
...திவாய்ந்ததுமான ஒரு
ஆவார்கள். இவர்
...வரி மீ 24-ந்தேதி
...றைக்கு இவரதுவயது
... 1881-ல் பட்டத்
இவர் பட்டத்துக்கு
...க்கு 50 வருஷம் ஆகி
...த ஜமீன் பரம்பரைக்
...வர் ஒருவரே 50 வரு
...ண்டார் என்பதோடு
... பாளையதாரர் ஆவார்.
...ாரம்பரியர்களால்தான்
...ந்து ஈரோடு வழியாக
...ரை வெட்டப்பட்டிருக்
...பன் வாய்க்கால் என்
...ளமுள்ள வாய்க்கால்
...ிந்த ஜமீன்
...த்து
...ந்தாலும்
உ... ...மே
...ழுக்கம், நாகரீகம் முத
...ிக்கப்பட்டு வந்தார்.
... வருஷ ஜமீன்தாரர்
...து இவரைப் போன்ற
..., மூன்று பங்கு வரும்
...பஜமீன்களையெல்லாம்
...ருமையாகவும், பிரபல
...ந்து குறிப்பிடத்தக்

...ூர் ஜில்லாப் பொது
...ந திலகம்போல் இருந்த
...ால்வது மிகையாகாது.
...வேளாள சமூகத்தைச்
...ச்செல்லா வாசிகளான
...போல் அல்லாமல்
...ல்லா சமூகப் பிர
...நெருங்கின பழக்
... உடையவராயிருந்த
...ல காரியங்க
...து மக்களு
... வந்தார்.
... மனிதர்
... தகை
... பட்டா
... திக
... ரு
... ா

என்று கருதும்படியாகவும் இல்லாமல், அதற்கு நேர் விரோதமாய் ஊண், உடை, மரியாதை ஆகிய விஷயங்களில் ஜாதிவித்தியாசம் என்பதே இல்லாமல் எல்லாருடனும் சமத்துவம் காட்டுவதும், பட்லர்கள் ("பறையர்கள்") என்பவர்களைக்கொண்டு சமையல் வகையரா செய்வித்து சாப்பிட்டு வந்தார்.—கடவுள் என்னும் விஷயத்தில் மாத்திரம் சற்று அதிகமான உணர்ச்சி இருந்து வந்தபோதிலும், புதிய நாகரீகம் அதாவது (*Uptodate fashion*) என்கின்ற விஷயத்தில் இந்தியாவுக்கு மேல்நாட்டு நாகரீகம் எது இறக்குமதி யானாலும் அது முதலில் ஜமீன்தாரர் அவர்கள் வீட்டில் வந்து புகுந்து அவர்கள் மூலம்தான் அது மதிப்புப்பெற்று உலாவும்படியாக இருக்கும்.

தவிர, ஜமீன்தாரர்கள் என்ற பேரால் அநேகர் இந்நாட்டில் இருந்தபோதிலும், மரியாதை கொடுத்து, மரியாதைவாங்குவது என்பதிலும், யாருடனும் பட்சமாய்ப் பேசுவது என்பதிலும், ஒரு மனிதனிடம் முதல் நாள் பழகும்போது எப்படிப் பழகினாரோ அதே முறையில் கடைசிவரை நடந்துகொள்வது என்பதிலும் மிக்க ஆசையும், கட்டுப்பாடும் உடையவர்.



திவான்பகதூர் முத்துராமசாமி காளிங்கராயர்.
முடிவெய்திய ஜமீன்தாரர்.



...் காளிங்கராயர்.

ஆங்கிலத்தில் எட்டிக்கட் என்று சொல்லப்படும் ஆதாவது மக்களிடம் மக்கள் பழகும் வாழ்க்கைப்பத்திஎன்னும் விஷயத்தில் வெள்ளைக்காரர்கள் கூட நமது ஜமீன்தாரரிடம் வந்து பழகிப் போகும்படியான உயர் நிலையில் இருந்தவர். தென்னாட்டு மற்ற ஜமீன்தாரர்களின் மரியாதையை மிகவும் பெற்றவர் என்பதோடு அவர்களின் மதிப்பையும் நன்கு பெற்றிருந்தார். பொதுக்காரியங்களுக்குத் தாராளமாய் பணம் உதவும் பிரபு. இவருக்கு 5-வது ஜார்ஜ் அரசர் பட்டாபிஷேக ஞாபகார்த்தமாய் 1913ம் வருஷம் திவான்பகதூர் பட்டம் அளிக்கப்பட்டது. இவரது குமாரர்கள் இருவரில் உயர்திரு. முத்துக்கிருஷ்ணசாமி காளிங்கராயர் அவர்கள் மூத்தவர். குமார ராஜாவாக இருந்து பட்டத்துக்கு வந்துவிட்டார்கள். இளையவர் லண்டன் சென்று உயர்தரக் கல்வி கற்று வந்து, திருவாங்கூர் மகாராஜாவின் பிரவேட் செக்ரிடரியாய் இருந்து இப்போது அதை விட்டு ஊருக்கு வந்து தாமதிக்கின்றார்.

இக்குடும்பம் மற்ற பணக்காரர்களைப்போல் பார்ப்பன தாசர்களாயல்லாமல் எப்போதும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையில் மிகவும் கவலை கொண்ட குடும்பமாகும்.

தென் இந்தியாவுக்கே என்? இந்தியாவுக்கே முதல் முதலாய் கோயமுத்தூரில் கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை முன்னின்று நடத்திய கனவான் நமது ஜமீன்தாரவர்களே யாகும். அன்று முதல் இன்றளவும் எக்காரணம் பற்றியும் அக்கொள்கையில் சிறிதும் மாற்ற மேற்பட இடமே யில்லாமல் இருந்து வந்திருக்கின்றது. இவர்கள் 67 வருஷகாலம் உயிருடன் இருந்து, 50 வருஷகாலம் ஆக்ஷியில் இருந்து காலமானதோடு, அடுத்த பட்டத்திற்கு தன்னிலும், எவ்விதத்திலும், குறையாத குணமும், மேன்மையும் உள்ள குமார ஜமீன்தாரர் வந்திருப்பதோடு மிக்க புத்தி சாதுர்யமும், தைரியமும், வீரமும் பொருந்திய இளைய குமாரர் நடராஜ காளிங்கராயர் உற்ற துணையாய் இருந்து பழையபடியே எல்லாக் காரியங்களும் நடைபெற்று வரும் என்பதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை என்று இருந்தாலும், ஒப்பற்ற ஒரு பெரியாரை கோயமுத்தூர் ஜில்லா இழந்து விட்டது என்பதற்கு புதிய ஜமீன்தாரரும் அவரது சகோதரரும் தான் மக்களுக்கு ஆறுதல்கூற வேண்டுமென்று கூறி முடிக்கின்றோம்.

—